DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR
**Case No: CC.42/2021**
Prosecution witness- **PW.7**

| | | | |
|---|---|---|---|
| Name | : Doctor Kannan | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 12:00 P.M. to 12:10 P.M. | | |

**(Accused A1, A2 present. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.09.2023

11.09.2023 முதல் விசாரணை

நான் தற்போது பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் கால்நடை மருந்தகத்தில் கால்நடை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன்.

1) இதற்கு முன்பு உதகமண்டலம் கேத்தி கால்நடை மருந்தகத்தில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வந்தபோது 06.11.2020ம் தேதி இரவு கக்காச்சி அருகிலுள்ள ஏவிடி தேயிலை தோட்டத்திற்கருகில் சிறுத்தை ஒன்று இறந்து கிடப்பதாக குன்னூர் வனச்சரக அலுவலர் மூலம் தகவல் பெறப்பட்டு 07.11.2020ம் தேதி காலை 11.00 மணிக்கு மேற்படி சம்பவ இடத்திற்கு சென்று நானும் மருத்துவர் திரு.விஜயகுமார், வனச்சரக அலுவலர் சசிக்குமார், வனவர் சபரீசன், வனக்காப்பாளர் நாகராஜன் மற்றும் வனச்சரக அலுவலர்கள் முன்னிலையில் இறந்துபோன சிறுத்தையினை கைப்பற்றி சம்பவஇடத்தில் வைத்து பிணக்கூராய்வு செய்தேன். இறந்துபோன சிறுத்தையானது மோட்டார் வாகன பிரேக்குக்கு பயன்படுத்தப்படும் ஒயரை கொண்டு சுறுக்கு வைக்கப்பட்டு கழுத்து இறுகிய நிலையில் கிடந்தது. சிறுத்தையின் கழுத்தில் சுறுக்கு இறுகியதற்கான அடையாளம் மற்றும் சிறுத்தை உயிருக்கு போராடியதில் அதன் நகங்கள் உடைந்த நிலையில் காணப்பட்டது.

2) பிணக்கூராய்வில் சிறுத்தைக்கு மூச்சுக்குழாய் உடைப்பு மற்றும் மூளைக்கு செல்லும் ரத்தக்குழாய் உடைப்பு ஏற்பட்டு மூச்சுதிணறல் ஏற்பட்டு இறந்துள்ளது என்பது எனது ஆய்வில் தெரியவந்தது. மேலும் சிறுத்தையின் பாகங்கள் தடயவியல் துறைக்கு அனுப்பப்பட்டு தடயவியல் ஆய்வுக்கு உட்படுத்தி விஷம் எதுவும் இல்லை என்று அறிக்கை பெறப்பட்டது. பிணக்கூராய்வு அறிக்கை மற்றும் தடயவியல் ஆய்வறிக்கை ஆகியவற்றை வனச்சரக அலுவலர் வசம் ஒப்படைத்தேன். பிணக்கூராய்வு அறிக்கை வ.சா.ஆ.5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. **(தடய அறிவியல் ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சம்பந்தமாக வனச்சரகர் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u> - (எதிரிகள் தரப்பில்)

1) வனச்சரகர் என்னை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார். எனது ஆய்வறிக்கையை எப்போது சமர்ப்பித்தேன் என்றால் 29.01.2021ம் தேதி சமர்ப்பித்தேன். என்னை வனச்சரகர் விசாரித்தபோது பொதுமக்கள் யாரேனும் இருந்தார்களா என்றால் என்.ஜி.ஓ-வை சேர்ந்த இரண்டு நபர்கள் இருந்தனர். பிணக்கூராய்வு செய்யும்போது மேற்படி வனச்சரக அலுவலர்கள் அனைவரும் சம்பவ இடத்தில் இருந்தார்கள்.

2) சம்பவ இடமருகே ஆறு ஓடுகிறதா என்று நான் பார்க்கவில்லை. நான் சொல்வதுபோல் என்னை சம்பவ இடத்தில் வைத்து விசாரிக்கவில்லை என்றும் வனச்சரக அலுவலகத்தில் வைத்து தான் விசாரித்தார்கள் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

/ஒப்பம்/R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்.